# பட்டுக்கோட்டையார் பாடல்களில் வேளாண்மை

# Agriculture in Pattukottaiyar Songs

*அன்பரசு மாரியப்பிள்ளை*
உதவிப் பேராசிரியர் (உழவியல்துறை)
வேளாண் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி
நிறுவனம் (VISTAS), பல்லாவரம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச் சுருக்கம்**

*பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரம் அவர்களில் ஒரு சிறந்த கவிஞர், அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர், மற்றும் பல தொழில்களை செய்துள்ளார். அவர் கொடுத்த பாடல்களால் தமிழ்நாட்டில் பல சமூக சீர்திருத்தம் மற்றும் பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அவர் பாடல்களில் பெரும்பாலான கருப்பொருட்கள் இயற்கை, சிறுவர், காதல், மகிழ்ச்சி, சோகம், நகைச்சுவை, கதைப்பாடல், நாடு, சமூகம், அரசியல், தத்துவம், பாட்டாளிகளின் குரல், இறைமை, பொது என பல உண்டு. ஆனால் இவற்றிற்கெல்லாம் அடிநாதமாக விவசாயத்தையும் விவசாயம் சார்ந்தவார்த்தைகளையும்கையாண்டுள்ளார். காரணம் இவர் அடிப்படையில் விவசாயி மற்றும்விவசாயிகளின் மீது அதீத அன்பும் கொண்டவர். இவர்எழுதியபாடல்களில்வேளாண்மை சார்ந்த வார்த்தைகளே அதிகம் படுத்தியதையும் அதை மக்களோடுமக்களாக இருந்துசொன்னதையும் பட்டுக்கோட்டையார் பாடல்களில்வேளாண்மை எனும் இக்கட்டுரையில் பார்க்கப் போகின்றோம்.*

***முக்கியச்சொற்கள்:*** *பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாடல், வேளாண்மை, விவசாயி.*

**Anbarasu Mariyappillai**
*Assistant Professor (Agronomy)*
*School of Agriculture*
*Vels Institute of Science, Technology*
*Advanced Studies (VISTAS)*
*Pallavaram, Chennai, Tamil Nadu, India*

***Abstract***

*Pattukottai Kalyanasundaram was a great poet, scholar, thinker, lyricist, and many other professions among them. Many social reforms and activities were carried out in Tamil Nadu through his songs. Most of the themes in his songs are nature, children, love, happiness, sadness, comedy, storytelling, country, society, politics, philosophy, the voice of the proletariat, sovereignty, the public, etc. But under all these, he has used agriculture and agricultural words. Because he is a farmer and has a great affection for the farmers. In this article, we are going to see Agriculture and related things in the songs written by him, the words related to agriculture were mostly used and he said them from the people along with the people.*

***Keywords****: Pattukottai Kalyanasundaram, Song, Agriculture, Farmer.*

**Citation**

Anbarasu, M. "Agriculture in Pattukottaiyar Songs." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 16–28.

***முன்னுரை***

*பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (ஏப்ரல் 13,1930 - அக்டோபர் 8,1959) ஒரு சிறந்த தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர் ஆவார். எளிமையான தமிழில் சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களையும் அதிலும் வேளாண்மை சார்ந்த வரிகளையும் எழுது, வலியுறுத்திப் பாடியது இவருடையசிறப்பாகும். இவருடையபாடல்கள்அனைத்தும்நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.*

*கல்யாணசுந்தரம் அவர்களின் பரிமாணங்களாவன, விவசாயி, மாடு மேய்ப்பர், மாட்டு வியாபாரி, மாம்பழ வியாபாரி, முறுக்கு வியாபாரி, தேங்காய் வியாபாரி, தண்ணீர் வண்டிக்காரர், அரசியல்வாதி, பாடகர், நடிகர் மற்றும் கவிஞர் இவையனைத்தையும் அவர் பாடல்களின் வரியாகவும், கேள்விகளாகவும் வேளாண்மை வரிகளுடனேயே சமூக கருத்துக்களை சரளமாக திரைப்பாடலாக இயற்றியவர் கவிஞரே.*

*பட்டுக்கோட்டையார் பல கஷ்டங்களுக்கிடையே தன் சுயமுயற்சியாலும் இலட்சியத் தெளிவாலும் திரையுலகின் உன்னதமான நிலையை அடைந்தார்.சினிமாவில் பெரும் புகழ் அடைந்த போதும் அவர் எப்போதும் விவசாய இயக்கத்தை மறந்ததில்லை.அதையே பட்டுக்கோட்டையார் பாடல்களில் வேளாண்மை என்ற இத்தலைப்பில் ஆய்வுக்கட்டுரையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

***ஆய்வுகளும் கலந்துரையாடலும்***

***கண்ணில் பட்டதை கவிதையாக (விவசாயத்திற்காக)***
***கெண்டைக் குஞ்சே***
***ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே - கரை***
***ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே***
***தூண்டில் காரன்வரும் நேரமாச்சு - ரொம்ப***
***துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே.***

*கவிஞர் எழுதிய முதல் கவிதை இது, பட்டுக்கோட்டையார் 14 வயதில் தான்பார்த்த மீன் குஞ்சுகளை தூண்டில்காரர் வந்தால் கொண்டு சென்று கொய்துவிடுவான் என கவிதையாய் சொல்லி விளக்குகிறார்.*

***கண்ணின் மணிகள் - 1954 (நாடகப் பாடல்)***
***ஆண்: கதிராகும் கழனியில்***
***சதிராகும் பெண்மணி***
***கலைமேவும் அழகாலே கவர்ந்தாய் கண்மணி***
***முதிராத செடியே முல்லை மலர்க் கொடியே***
***பெண்: அன்பே என் ஆருயிரே ஆணழகே என்னுடன்***
***தென்பாங்கு பண்பாடும் தீராத இன்பமே***
***ஆண்: ஏரோட்டும் விவசாயி எருதுகள் ஏரியிலே***
***பெண்: நீரோட்டும் அழகைப்பார் கண்ணாலே***
***ஆண்: பாராட்ட வேண்டியவள்***
***பானைதனைத் தலையில் வைத்துப்***
***பக்குவமா வராபாரு பின்னாலே***

***பெண்:தேனாறு பாயுது செங்கதிர் சாயுது***
***ஆனாலும் மக்கள் வயிறு காயுது***
***ஆண்: மானே இந்நாட்டில் வகையான மாறுதல்***
***வந்தாலன்றி ஏது சீருகள்***
***இருவர்:உழவனும் ஓயாத உழைப்பும்போல் நாமே***
***ஒன்றுபட்டு வாழ்க்கையில் என்றும் மிருப்போம்.***

*பட்டுக்கோட்டையார் பல்லவியில் கழனியையும், அடுத்தவரியில் வேலை செய்யும் பெண்ணையும், இரண்டும் சேர்ந்தார் போல் அடுத்த வரியில் அழகையும், அழகு என்றும் இளமையென நாளாம் வரியிலும் எழுதியுள்ளார். ஏரோட்டும் விவசாயிகளையும் ஏரியிலே வளர்ந்து ஊரும் எருதுகளையும் இயல்பாய் இயற்கையை பதிவு செய்து, ஏழையையும் உழவையும் பேசி ஒன்றுபட்டு வாழ் என்று வால் அறுத்தால் உண்டாகும் காயம்போல் மனதை கீறிவிடுகிறார்.*

***படித்தபெண்–1954***

***பெண்: வாடாத சோலை மலர்பூத்த வேளை***
***வளர் காதலாலே மனம் பொங்குதே***

*இப்பாடலின் இடையில் பெண் பாடுவதுபோல் அமைந்துள்ள வரிகளில் கவிஞர் ஆசைக்காவியத்தையும் கரும்பை உவமையும், அவ்வண்ணமே தளிர்க்கொண்டே இராணி நீ என்று கூறுகிறார்.இப்பாடலின் வரிகளில் ஆற்றையும் சோலையும் கொண்டு நீரூற்றை காதலால் ஊற்றுகிறார். அவ்வரிகள் கீழே:*

***குறும்பும் நியாயமே அரும்பே மாரனே***
***கரும்பே ஆசைக் காவியமே - கரும்***
***மாந்தளிர் மேனி வாய்ந்தஎன் ராணி***
***ஆற்றோரம் மேவும் அடர்சோலை போல***
***படர் காதலாலே பலன் காணுவோம்***
***சுடர்வீசி வாழ்வில் சுகம் காணுவோம்.***

***நண்டு செய்த தொண்டு– 1955, ஜனசக்தி பத்திரிக்கை***

***ஊரையடுத்த ஓடைக் கரையில்***
***ஓட்டை நிறைந்த ஒருசிறு குடிசை***
***நாற்புறம் வயல்கள் நல்ல விளைச்சல்***
***நானும் வள்ளியும் வசிக்கும் இடமிது***

***சொல்லச் சொல்ல சுவையேது தமிழில்***
***வள்ளியுரைக் கின்றாள் மச்சா னிடத்தில்***
***மச்சான் மச்சான் கதையைக் கேட்டியா***
***வாரக் குத்தகை தர்ரதாச் சொல்லி***
***வரம்பில் கொஞ்சம் நட்டுவச் சோமே***

*ஆமா ஆமா அதுக்கென்ன இப்போ?*
*நேத்தைக்குத் தண்ணி நிறைய இருந்ததே*
*பின்னாடி நட்டதால் பிஞ்சாயிருக்கும்*
*இன்னும் பத்துநாள் எல்லாம் பழுத்திடும்*

*அதுக்கில்ல மச்சான் நான்சொல்ல வந்தது*
*அடுத்த வயல்லே இன்னொரு*
*ஆத்து வாய்க்காலை அடைச்சுத் திருப்பணும்*
*ஐம்பது காசுக்குத் தண்ணி பாய்ச்சணும்*

*ஆருவந்தாலும் அடிப்பேன் உதைப்பேன்*
*அப்படி இப்படீன்னு அலறிக் குதிச்சாரு*
*இதுக்கும் நமக்கும் எட்டா துன்னு*
*இருட்டும் முன்னே வீட்டுக்கு வந்திட்டேன்*

*பொழுது விடிஞ்சு போய்ப் பாத்தா*
*பொங்கித் ததும்புது நம் வயலும்*
*வாய்க்காலும் வெட்டலே மடையும் திறக்கலே*
*வழியும் அளவுக்குத் தண்ணி யேது?*

*நண்டு செஞ்ச தொண்டு மச்சான்*
*நாட்டு நிலைமையை நல்லாப் பாத்தது*
*ஏற்றத் தாழ்வை ஒழிக்க வரப்பில்*
*போட்டது வளையைப் புரட்சி நண்டு*
*பாய்ந்தது தண்ணி பரவி எங்குமே*
*காய்ந்த பயிர்களும் கதிரைக் கக்கின.*

*ஆகா ஆகா அருமை நண்டே*
*உனக்கு இருக்கும் உயர்ந்த நோக்கம்*
*உலக மனிதர்க்கு உண்டா நண்டே*
*பெருநிலக் காரன் வரப்பைக் குடைந்து*
*சிறுநிலங் காத்துச் சிறந்த நண்டே*

*என்று நாங்கள் நன்றி செலுத்து கையில்*
*எதிருள வயல்களை இருவரும் நோக்கினர்*
*பச்சை மயில்போல் பயயிர்கள் அசைந்தன*
*பழுத்த கதிர்கள் பழுத்துக் கிடந்தன*

*படுத் திருந்த பசுந்தரை அடியில்*
*வெடித்த இறையிலும் வியமிருந்தது*
*உழைப்பாளர் பலனை ஒட்ட உறிஞ்சே*
*ஒதுக்கிப் பதுக்கும் உல்லாச மனிதனின்*

*கள்ளத் துணிவையும் கருங்காலிச் செயலையும்*
*கொல்லும் ஈட்டிபோல் குருத்துகள் நின்றன*
*இந்த காட்சியில் இன்பம் கண்டனர்*
*இயற்கை ஆட்சியை இருவரும் வியந்தனர்*
*மடைத்தாண்டி விழுந்த வாளை மீன்போல்*
*வள்ளி துள்ளி வரப்பில் குந்தினாள்.*

*கவிஞர், நண்டை வைத்து நாட்டையும், ஆட்சியாளர்களின் செயலையும் ஒட்டை போட்டு காட்டி விட்டார். அத்தோடு நில்லாமல் பயிர்களுக்கு தண்ணீரையும் அதன் வளர்ச்சியின் வீரியத்தையும் அம்பாக திணித்து ஆணிவேறாக ஏவிவிட்டு நன்மையை செய் இல்லை இயற்டிகாக செயல்படுவோமென சொல்லாமல் சொல்லி வேளாண்மையையும் வேளாண் குடிகளின் நிலைமையையும் புட்டு வைத்து நெற்றியடியாக பாட்டில் வைத்துள்ளார்.*

*சங்கம் அமைத்திடுவோம் - 1955, ஜனசக்தி*
*எங்கும் விவசாய சங்கம் அமைத்ததில்*
*அங்கம் வகித்திடுவோம் - இந்தத்*
*தங்க முயற்சிக்குப் பங்கம் விளைத்திடும்*
*தன்மையை வெட்டி மிதித்திடுவோம்*

*கங்குல் பகல் நின்று காடு திருத்திய*
*கைகள் உயர்த்திடுவோம் - என்றும்*
*எங்கள் உழைப்பினை எங்களுக்கே என*
*எக்காளம் ஊதிக் கிளப்பிடுவோம்*

*ஊரைச் சுரண்டி உயர்ந்த மனிதரின்*
*உல்லாச வாழ்க்கையெல்லாம் - தின்னச்*
*சோறுமின்றித் தினம் கோயிலில் துஞ்சிடும்*
*தோழன் உதிர்த்த வியர்வையன்றோ?*

*கைப்பு நிலத்தையும் செப்பனிட்டுப் பயிர்*
*காத்துக் கதிர் வளர்த்தோர் - அதன்*
*கண்ட பலனைப் பறிகொடுத்து நின்று*
*கண்ணீர் வடிப்பதை நாம் சகியோம்*

*மண்வெட்டி கொண்டு வரம்பு கட்டிப்பெரும்*
*வாய்க்கால் வடிகால் வெட்டி - நிலம்*
*பண்பட்டபின் விதை கொட்டி உழைத்தவன்*
*பக்குவ மாக்கிப் பலன் பெறுங்கால்*

*முன்பட்ட பாக்கி முதலுக்கும் வட்டிக்கும்*
*முற்றும் வரண்டிக் கொண்டு - அங்குத்*

***தென்பட்ட ஏழைகள் புண்பட்ட நெஞ்சினில்***
***தீமூட்டும் செய்கைகளை***
***கண்கட்டுப் போனதோ இன்னும் சகிப்பதேன்***
***துன்புற்ற தோழர்களே - துள்ளி***
***மின்வெட்டுப் போல பளிச்சென்று வாருங்கள்***
***மேதினிக் குண்மை விளக்கிடுவோம்***

***பொங்கும் தொழிலாளர்க் கின்னல் புரிந்திடுவோம்***
***பன்மனப் போக்கிகொள் - மங்கி***
***எங்கோ மறைந்தனர் என்றோ ஒழிந்தனர்***
***என்னுங் குரல்கள் எழுப்பிடுவோம்***

***பித்தேறிக் கத்தும் பெருநிலப் பயிரின்***
***சொத்தை முயற்சியெல்லாம் - மக்கள்***
***சக்தியைக் கண்டு சரிந்து விழிப்பறை***
***சாற்றிக் கிளர்ந்தது நிறைந்தெ ழுவோம்***

FPO & Farmer Producer Organisation *என்ற அமைப்பை 2015 ம் ஆண்டு சுயடிவாய ஆவைசய என்பவர் 526 விவசாயிகளை பங்குதாரர்களாக மாற்றி* Farmer producer Company *யாக மாற்றி உருவாக்கினார். 2018 ம் ஆண்டு மத்திய அரசு இதை திட்டமாக்கி இப்பொழுது இந்தியா முழுவதும்* FIG & (Farmers Interested group) and FPG & (Farmer Producer Group*)மற்றும்* FPC - *(*Farmer Producer Company*)யாக செயல்திட்டம் வடிவம் முற்று பெற்று பல விவசாயிகளை முதலாளிகளாக, தான் விளைவிப்பதை தானே சந்தைப்படுத்தி இடைத்தரகர்கள் இன்றி, தானே விளையை நிர்ணயித்து விற்கின்றனர்.*

Commission for Agricultural Costs and Prices (CACP) *என்ற அமைப்பு 1965 ல் தொடங்கப்பட்டு **1970** களின் மத்தியில்*CACP *என்று குறைந்தளவு விளைபொருள்களின் விளைகளை நிர்ணயித்து அரசே வாங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இது இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.*

*இந்த இரண்டு மாபெரும் திட்ட வடிவங்களை 1955 ம் ஆண்டே கிட்டத்தட்ட* CACP *க்கு 10 ஆண்டுகள் முன்பும்,* FPO *க்கு 60 ஆண்டுகளுக்கு முன்பே எங்கும் விவசாய சங்கம் அமைக்க வேண்டும், அதில் அனைவரும் அங்கம் அமைத்து வகித்திட வேண்டுமென்று ஊகஙீதிட்ட முறையினை அடுக்கடுக்காக தாய்மொழியில் அடுக்கி வைத்த மேதை பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்.*

*உல்லாசப் பாட்டுப்பாடி - படம் தெரியவில்லை*

***பல்லவி:***

***உல்லாசப் பாட்டுப் பாடி***
***ஊரெங்கும் வேட்டை யாடி***
***எல்லாரும் தூங்கும் போது***
***குல்லாய் போடும் கில்லாடி***

*இப்பாடலின் சூழ்நிலை நடனமாதுவிற்கும் கள்வர் ஒருவருக்கும் இடையேயான பணம் பற்றிய பாட்டு இதில் கள்வர் நடனமாடுவதை நெல் ரகங்களை வைத்து வர்ணிப்பது அக்கால ரம்மைக்கும்,*

*இடைக்கால ரம்பாவுக்கும், நிகழ்கால நடிகைகளுக்கும் சற்று வாய்ப்பு குறைவே இதோ அந்த வரிகள்*

***சம்பரம்பா கம்பஞ் சம்பா***
***ரொம்ப ரொம்பத் திம்பாளா***
***தங்க ரம்பா அங்கஞ் செம்பா***
***செங் கரும்பா?நம்மாளா?***

*புது நாளினை எண்ணி வணங்கிடுவோம் - 1956 (ஜனசக்தி)*

***சும்மா கிடந்த நிலத்தைக் கொத்திச்***
***சோம்ப லில்லாமே ஏர் நடத்தி***
***கம்மாக் கரையை ஒசத்திக் கட்டி***
***கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டி***
***சம்பாப் பயிரைப் புடுங்கி நட்டுத்***
***தகுந்த முறையில் தண்ணீர் விட்டு***
***நெல்லு விளைஞ்சிருக்கு - வரப்பும்***
***உள்ளே மறைஞ்சிருக்கு***
***மண்ணைக் கிளறிக் குழிய மைச்சு***
***வாழைக் கன்னுகளை ஊடாமலே வச்சு***
***தண்ணி பெற அக்களை பறிச்சுச்***
***சந்திர சூரியர் காண ஒழைச்சு***
***ஒண்ணுக்குப் பத்தாக் கிளை வெடிச்சு***
***கண்ணுக் கழகா நிண்ணு தழைச்சு***
***இலை விரிஞ்சிருக்கு- காய்க்***
***குலை சரிஞ்சிருக்கு***

*வேளாண்மை (உழவியல்) துறையில் படிக்க வேண்டிய அறிவியலை கவிதையாக வடித்து நிலம் முதல் மகசூல் வரை வரிவரியாக அதீத அறிவியலை பாமரனுக்கு கவிதையாக வடிவமைத்து பாடம் நடத்தியவர் கவிஞர் பட்டுக்கோட்டையார் விவசாயிகளுக்காக கவிதை படிப்பதில் கவிஞரை போன்று மற்றொருவர் வாய்ப்பது அரிதே.*

***அன்பின் பெருமை***

***ஒன்றுபட்ட கணவனுக்குத் தொண்டுசெய்து வாழ்வதற்கு***
***உரிமை கிடைத்திடுமா சொல்? வண்ணக்கிளியே அன்பின்***
***பெருமை நிலைத்திடுமா சொல்?***
***கன்றுநட்டு நீரிரைத்துக் கண்விழித்துக் காத்திருந்து***
***பிஞ்சுவிட்டுக் கனியாகும் போதிலே - கிளையில்***
***துண்டுபட்டால் என்னபலன் வாழ்விலே***

*கன்றுபட்டு நீரிரைத்து அதை கண்விழித்து பாதுகாத்து பூ பூத்து, காய் காய்த்து, கனியாகும் போது, கிளை துண்டுபட்டால் வளர்ந்தது எவ்வளவு வீணோ அதுபோல பிள்ளைகளை பெற்று, பாது காத்து - வளர்த்து சொல்பேச்சு கேட்காமல் பிள்ளை பிரிந்தால் துண்டாவது போல் என்றும் மாறாத தந்தை சொல்மிக்க மந்திரமில்லை, தாயை சிறந்த கோவிலும் இல்லையென எக்காலம் பொருந்தும் பொருளை கருவாக இலகுவாக பாடலாய் படைத்துள்ளார் பட்டுக்கோட்டையார்.*

***படம் : கற்புக்கரசி - 1957***
***பாடல் : மனம் துள்ளி ஓடுதே***
***எல்லை மீறுதே - மனம் துள்ளி ஓடுதே - ஆகா***
***எல்லை மீறுதே - மனம் துள்ளி ஓடுதே***
***என்னாளும் நாணாத இன்பம் பொங்குதே - எல்லாம்***
***மண்ணின் கோலமோ? இல்லை மனித ஜாலமோ***
***வந்தோரை வாழ்த்தும் மாஞ்சோலைக் காற்றும்***
***வண்டாடும் மாமலர்ப் பந்தாடுதே***
***மண்ணீரங் கொண்டே முன்னேற்றங் கண்டே***
***வேரோடும் செவ்வாழைத் தேராடுதே***
***கண்டாலுமே உளம் கொண்டாடுதே - இந்தக்***
***கண்காட்சி யேதடி விண்மீதிலே***

*வரவேற்பதில் மாஞ்சோலைக் காற்றும், புன்னகைப்பதில் மாமலரும் முகமும், மண்ணோடும் - மனதோடும் செவ்வாழை தேராக உனை கண்டதால் உள்ளம் கொண்டாடுதே இந்தக் காட்சி விண்ணுலகத்திலும் இல்லையென கவிஞர் காதலியின் கணவன் வந்ததை குறிப்பிடுகிறார்.*

***எண்ண மீன்கள்***

***இல்லாத அதிசயமா இருக்குதடி ரகசியமா***
***ஏதாச்சு இவமனசு இப்படி யாச்சுதோ***

*என்ற பாடலின் சரணத்தில் வேலைக்கு போன காதலன் வந்து எனைக்கல்யாணம் முடித்து, வாழ்வின் இன்பம், பிள்ளைகளென மெட்டுடன் எழுதியிருக்கும் வரிகள் இதோ*

***மன்னன் மேலேவெச்ச ஆசை வளருது - மனசு***
***வண்டிச் சக்கரம் போலேசும்மா சுழலுது***
***வேலையாய்ப் போனவரு வெற்றியுடன் வருவாரு***
***மாலையிட்டு மணமுடித்து வாழ்விலின்பம் தருவாரு***
***வாழைத்தோட்டம் போல்தழைத்து மங்கலமாய் வாழ்வாரு***
***மஞ்சுளா முகத்தினிலே மஞ்சளாகத் திகழ்வாரு***

*காதலன் மற்றும் கணவர்கள் வெளியில் சென்று சம்பாதிக்கம் ஆண்களுக்கு, பெண்கள் வீட்டில் எவ்வாறு காத்திருக்கிறாள், நீ வந்தால் வாழ்வு வாழைபோல் தழைத்து மங்களமாய் ஜொலித்து மனநாளாக என்றும் எந்நாலும் மஞ்சளாக இனிக்குமென எதிர்பார்ப்பை எதார்தமாய் பாடலின் வரிகளில் வேளாண்மை வார்த்தைகள் போட்டு வாழ்க்கையை சுட்டி காட்டியிருக்கிறார்.*

***படம் : அரசிளங்குமரி – 1957***

***பாடல் : உயர்வளிக்கும் கூட்டம்***
***ஒருவன் : ஏற்றமுன்னா ஏற்றம்***
***இதிலேயிருக்குது முன்னேற்றம்***
***மற்றவன் : எல்லோரும் பாடுபட்டா - இது***
***இன்பம் விளையும் தோட்டம்***

*ஒருவன் : கிணற்றுநீரை நிலத்துக்குத்தான்*
*எடுத்துத்தரும் ஏற்றம்*
*மற்றவன் : கிளைவெடிக்கும் பயிர்களுக்கு*
*உயர்வளிக்கும் கூட்டம்*
*ஒருவன் :எறும்புபோல வரிசையாக*
*எதிலும்சேர்ந்து உழகை;கணும்*
*மற்றவன் : இடுப்பே வளையாமனிதர்*
*எதிர்பாத்த்துப் பொழைக்கணும் - நம்மை*
*எதிர்பாத்த்துப் பொழைக்கணும்*
*ஒருவன் : உடும்புபோல உறுதிவேனும்*
*ஒணான்நிலைமை திருந்தனும்*
*மற்றவன் : ஒடஞ்சிபோன நமது இனம்*
*ஒண்ணாவந்து பொருத்தனும்*
*ஒருவன் : ஓதுவார் தொழுவாரல்லாம்*
*உழுவார் தலைக்கடையிலே*
*மற்றவன் : உலகம் செழிப்பதெல்லாம்*
*ஏர்நடக்கும் நடையிலே*

*உலக பொதுமறையாக விளங்கும் திருக்குறளில் உழவு எனும் 10 திருக்குறள் உழவை உள்ளபடியே உலகத்திற்கு விளக்கும், அவ்விளக்கத்திலும் கருத்திலும் சற்றும் மாறாமல், சுற்றமும் சூழ்நிலையும் ஒத்துபோகும் பாடல் வரிகளில் உலக பொதுமறையை பாமரனுக்கு பாடலாய், வேளாண்மையியலை இயல்பாய் இயற்கையாய் திருக்கையாய் உயர்த்தியிருக்கிறார் பட்டுகோட்டையார் (அறந்தை நாராயணன், 1998).*

***படம் : ஆரவல்லி – 1957***

*பாடல் : நாத்தனா*
*சின்னக்குட்டி நாத்தனா*
*சில்லரையை மாத்துனா*
*குன்னக்குடி போறவண்டியில்*
*குடும்பம்பூரா ஏத்துனா*

*என்ற நையாண்டி பாடலில் கடைசி ஒரு சரணங்களில் வேளாண்மைக்கான வார்த்தைகளை வரிகாளக அமைத்து சம்சாரிகளை சரளமாக பாடவைக்கிறார், இதோ அந்த வரிகள் கீழே*

*பன்னப்பட்டிக் கிராமத்திலே*
*பழையசோறு தின்னுக்கிட்டா*
*பங்காளிவீட்டுச் சிங்காரத்தோட*
*பழையகதையும் பேசிக்கிட்டா*

*கண்ணுக்குட்டிய மல்லுக்கட்டியே*
*கயித்தப்போட்டுப் பிடிச்சிக்கிட்டு*
*மண்ணுக்கட்டியால் மாங்காஅடிச்சு*
*வாயிலபோட்டுக் கடிச்சிக்கிட்டா*

*அதாவது கிராமத்தை குறிப்பிட்டு சோறிட்டு, பங்காளியையும் - பழைய கதையும் பேசி, கண்ணுக்குட்டிய கயித்தபோட்டு இழுத்துக்கிட்டு வயிறுக்கு உணவாக மண்கட்டி (களிமண்ணின் வலமை) வைத்து அடித்து மாங்காய் திண்கிறாள் என்பதை நையாண்டியாய் கதைக்கு ஏற்றாற்போல் எழுதியிருக்கிறார் கவிஞர்.*

***பெண் :எழில் குலுங்கும் உலகு***
***கழனி எங்கும் கதிராடும்***
***அழகு மங்கை சதிராடும்***
***கலையான நிலைகாண வாநீ! வா! வா!***
***ஆண் : கலயத்திலே கஞ்சிகொண்டு***
***கரையிலேவரும் பெண்ணைக் கண்டு - அங்கே***
***உழைப்பதைனை மறந்து உழவன்***
***கலங்குகின்றானே - நின்று மயங்குன்றானே***

*இப்பாடலில் கவிஞர் ஆண் - பெண்ணின் மனநிலையை வெளிப்படுத்த வேளாண்மையோடு கலந்த வாழ்க்கையை அதன் சொற்பொருள் கொண்டே உணர்த்துவதை அனைவரும் உளமாறவே போற்ற வேண்டும் அதாவது மங்கை மனநிலையை கழனி எங்கும் கதிராடும், அழகு மங்கை சதிராடும் எனவும் ஆணைகலயத்திலேகஞ்சிகொண்டுகரையிலேவரும்பெண்ணைக்கண்டுஅதாவதுமனைவியைகண்டு, நினைத்து)மனதைகலைப்பைதனைமறந்துஉழவன்கலங்குகிறான்-மயங்குகிறான்எனமனநிலையை கூட மண்வாசமாய் கூறுவது பட்டுக்கோட்டையாருக்கு மட்டும் உரியது.*

***படம் : தேடிவந்த செல்வம்***
***பாடல் : அதிக வேலை காத்திருக்கு***
***பக்கத்திலே இருப்பே - நான்***
***பாத்துப் பாத்து ரசிப்பேன்***
***வெக்கத்திலே முழிப்பே - நான்***
***விஷயம் தெரிஞ்சு சிரிப்பேன் இப்பாடலின் வரிகளில் உள்ள***
***காவேரி ஓரத்திலே கால்பதுங்கும் ஈரத்திலே***
***காலையிலே நான் நடப்பேன்***
***கலப்பை கொண்டுக்கிட்டு***
***கட்டழுகி நீவருவே***
***விதையைக் கொண்டுக்கிட்டு - நெல்லு***
***விதையைக் கொண்டுக்கிட்டு***
***வாய்க்கா வெட்டின களைப்பிலே - நான்***
***வந்து குந்துவேன் வரப்பிலே - புது***
***மஞ்சள் நிறத்திலே கொஞ்சம் முகத்திலே***
***நெஞ்சைப் பதித்திடும் வஞ்சிக் கொடி நீ***
***கஞ்சி கொண்டு வருவே - இன்பம்***
***கலயத்திலே தருவே***

*இப்படலில் கவிஞர் பெண்களின் வேளாண்மை பங்கினை இனிய பாங்காக பக்குவமாக கலப்படியும் விதையும் பெண் கொண்டுவர வாய்க்கால் வரப்பை சுத்தம் செய்து ஆணுக்கு கலைப்பு ஏற்படும் பொழுது மங்கையின் முகம் நெஞ்சம் பதித்து, கொஞ்சும் பாவை கஞ்சிக் கொடுக்கும் அழகில்*

*உடலுக்கும், வயிற்றிற்கும் விருந்து படைக்கிறாள் என்று விவசாயத்தில் பெண் பங்கையும் சேர்த்து கூறியிருக்கிறார்.*

***காலமிருக்குது பின்னே***

***பெண்: சும்மா கெடந்த நிலத்தைக்கொத்தி***
***சோம்ப லில்லாமே ஏர் நடத்தி***
***கம்மாக் கரையை ஒசத்திக் கட்டிக்***
***கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டிச்***
***சம்பாப் கயிரைப் பறிச்சு நட்டுத்***
***தகுந்த முறையில் தண்ணீர் விட்டு***
***நெல்லு விளைஞ்சிருக்கு - வரப்பும்***
***உள்ளே மறைஞ்சிருக்கு - அட***
***காடு வெளைஞ்சென்ன மச்சான் - நமக்கு***
***கையுங் காலுந்தானே மிச்சம்?***

***ஆண் : இப்போ- காடு வெளையட்டும் பெண்ணே- நமக்கு***
***காலமிருக்குது பின்னே***
***மண்ணைப் பொளந்து சொரங்கம் வெச்சுப்***
***பொன்னை எடுக்கக் கணிகள் வெட்டி***
***மதிலுவெச்சு மாளிகை கட்டி***
***கடலில் மூழ்கி முத்தையெடுக்கும்***
***வழிகாட்டி மரமான தொழிலாளர் வாழ்க்கையிலே***
***பட்ட துயரினி மாறும்- ரொம்பக்***
***கிட்ட நெருங்குது நேரம்***

*தரிசு நிலத்தைநிறுத்தி, கம்மாக்கரையிலிருந்து வெட்டிக் கொண்டுவந்து, விதையிட்டு, தண்ணீரிட்டு வெளஞ்ச நெற்பயிர்கள் வரப்பை மூழ்கி காணும் காட்சி வளமையை கூறுது, இருந்தும் வறுமை வாட்டுது காரணம் நாம் தொழிளாலர்களென மனைவி புலம்புகையில் மணவாளன் பொலம்பாதே நம்துயர் மாறும், நல்ல நேரம் வரும் விவசாயம் விளைந்தால் போதும் என அழகான வரிகளாய் ஆழமாய் கூறியுள்ளார் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார்.*

***இயற்கையின் பிணைப்பு – 1959, அமிர்தம் பத்திரிக்கை***

***இட்ட விதைகள் பயிராய் முளைத்து***
***இட்டவர் அதனை உயிராய் மதித்து***
***இரவும் பகலும் விழித்து உழைத்து***
***எதிர்ப்புக் களைகளை எடுத்தும் மிதித்தும்***
***இன்று தொண்டைக் கதிர்தான் நாளை***
***ரெண்டு தூற்றல் தூறினால் போதும் கண்டிப் பக்க கதிர்கள் வந்திடும்***
***என்று தினமும் எதிர்பார்த்து வந்தோர்***
***கதிரை அறுத்துக் கண்டு மகிழுவர்***
***புதிரெனப் பொங்கு உண்டும் மகிழுவர்***

***இதுவே உழவர்க் இன்பத் திருநாள்***
***இதுவே ஏழையும் மகிழும் ஒருநாள்***
***மகள் வீட்டிற்கு மகிழ்ச்சியோடு பெற்றோர்***
***வரிசை கொடுப்பது மரபு ஆகும்***
***பொங்கல் நாளை என்பதால் பொன்னான்***
***பொன்னி என்னும் கிழவன் கிழவி***
***வரிசை எடுத்து மகள்வாழ் சிற்றூர்***
***மயிலிரண் பாகையால் மஞ்சள் போதில்***
***வண்ணச் செந்நெல் மணிகள் குலுங்கும்***
***வயல்களின் வரப்பு வழியே நடந்தனர்***
***நாட்டுப் புறத்தினர் நடக்கும் போது***
***பாட்டும் பேச்சும் பலபல கதையும்***
***வீட்டு நடப்பும் வேற்றோர் விபரமும்***
***கேட்டும் விளக்கியும் செல்வது வழக்கம்***

*என தொடரும் இந்த கவிதை வரிகளில் கவிஞர் நாற்று நடுவது முதல் நாட்டு நடப்புவரை அதாவது பொங்கள் திருவிழா இயற்கையை வணங்குவதாயினும் இட்டபயிர்கள் இட்டவர் மலர விளைந்தால்தான் சீர்கொடுக்கவும் முடியும் சீராக மனிதன் தன்வாழ்நாளை சிறப்பாக கொண்டாடவும் முடியுமென பொங்கள் வாழ்த்தை உலகிற்கும் வேளாண்மைக்கும் வித்திட்டு கூறியிருக்கிறார்.*

***கஞ்சிப்பானை கவலை தீர***

*தைப்பொறந்தா வழிபிறக்கும் தரணியில் எல்லோருக்கும் கைமேலே பலன்கிடைக்கும் அம்மா வீரம்மா-எங்கும்களஞ்சியமாநெறஞ்சிருக்கம் ஆமாமருதம்மாபண்ணையிலே வேலைபார்க்கும்பாட்டாளி குடியிருக்கும் சின்னஞ்சிறு சேரியிலும் அம்மா வீரம்மா - இனி தென்பாங்குப் பாட்டுக்கேட்கும் ஆமா மருதம்மா*

***மாட்டுக் கழுத்தில் மணிகளைக் கட்டி***
***வாழ்த்த வேனும் வழக்கத்தை ஒட்டி***
***வீட்டை மொழுகி விளக்கு ளேற்றி***
***வெளஞ்ச நெல்லைக் கூட்டத்தில் கொட்டி***
***ஆசைதீர பரபிவிடணும் அம்மா வீரம்மா - எங்க***
***அத்தை மவந்தான் அளக்கவரணும் ஆமா மருதம்மா***

***குனிஞ்சு நிமிந்து குறுக்கே புகுந்து***
***கும்முனு கும்மியும் கொட்டுங்கடி***
***கோல வளையல் குலுங்குறப்பல***
***கொஞ்சம் நல்லாத் தட்டுங்கடி***
***கதிரடிக்கணும் புதிரு பொங்கணும்***
***கவேரி அன்னையைக் கும்பிடணும்***
***கஞ்சிப்பானை கவலைதீரக்***
***கலப்பைத் தொழிலை நம்பிடணும்***

*இறையும்இயற்கையையும்-பயிரும்சாமியும், தண்ணீர்வரும்தரணியும், காலத்தேபயிர்செய்ய உதவும் காவேரியும், நெல்லையும் புல்லையும், மாட்டையும் மணியையும் ஒன்றிணைத்து வரிக்குவரி*

*அம்மா, ஆமா, மருதம்மா வீரம்மா என சாமியையும் சஞ்சாரியையும் போற்றும் கவிஞர் பட்டுக்கோட்டையார் பட்டதையும் பாட்டில் வைத்தார், பார்த்ததையும் பாட்டில் வைத்தார் பாட்டாளிகளுக்கும் பாமரனுக்குமே கடைசிவரை இயற்றினார் பாடலை எழுதினார்.*

***சிங்கினிக் குறத்திமவ – 1958***

***ஜிலுஜிலுக்கும் பச்சைமலை, தென்றல் பொறந்தமலை***
***தென்பொதிகை எங்கள்மலை சாமியோ சாமி***
***தேக்குமரம், பாக்குமரம் - எங்க***
***தென்னை மரம், புன்னை மரம் எங்க***
***வாழ்க்கையெல்லாம் காட்டுக்குள்ளே எஞ்சாமியோசாமி***
***நாங்க வந்ததில்லே நாட்டுக்குள்ளே***

*எனத் தொடரும் பாடல், இதில் மலையில்தான் மழைத்தொடங்குது எனவும், மரங்கள்தான் எங்கள் வாழ்க்கை என மலைவாழ்மக்களை மற்றும் அவர்கள் தொடர்பான வாழ்க்கை மரங்கள் மற்றும் மரங்கள் சார்ந்தவைதானனென அழுத்தமாக கூறுவதற்கு நாங்கள் நாட்டுக்குள்ள வந்ததில்லே என்ற வரியை வாழ்க்கையை அழுத்தமாகவும் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.*

***முடிவுரை***

*பட்டுக்கோட்டையார்மாபெரும்புகழைசினிமாவில்அடைந்தாலும், அவர்அயராமல்உழைத்தது என்னவோ விவசாயமும், விவசாயத்தை சார்ந்த தொழில்களுமே.இப்படி தன் முயற்சியையும், தொழிலையும் இருகண்கள்போல மேற்கொண்டமையால் தன் கவிதைகளிலும், திரைப்பட பாடல்களிலும் வேளாண்மை இன்றி அவர் எழுதியது மிகவும் குறைவே. வேளாண்மை மற்றும் விவசாயிகளை மையப்படுத்தியோ மேற்கோள்காட்டியோ சமுதாயசீர்திருத்தம், அரசியல் கோட்பாடுகள், சிந்தனை கேள்விகள்மற்றும்சமதர்மம்போன்றவையைகூறியிருக்கிறார். இந்த ஆய்வுக்கட்டுரையில்கண்டிப்பாக உணரலாம் பட்டுக்கோட்டையார் வேளாண்மையை தன்னிலே கொண்டு பாடல் இயற்றியது, காரணம் என்னவெனில் அவர் பன்பரிணாமங்களில் பெரும்பாலும் விவசாயமும், விவசாயம் சார்ந்த தொழில்களுமே பட்டுக்கோட்டிடார் மேற்க்கொண்டு வாழ்ந்திருக்கிறார். திரைப்பட பாடல்களில் வேளாண்மையை முன்னிருத்தி பாடல்கள் எழுதியதில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தனிமுத்திரை என்பது அவர் பாடல்களில் தெரியும்.இந்த ஆய்வின் மூலமாக திரைப்பட பாடல்களில் பட்டுக்கோட்டையார் பாடல்களில் வேளாண்மையே அல்லது வேளாண்மை சார்ந்தவையே அதிகமென கூறப்படுகிறது.*

***ஒப்புதல்:தமிழ்திரைப்பாக்கூடத்திற்குநன்றிகள்பல.,***

1. நிதிதகவல்: எதுவும்இல்லை
2. மேற்கோள்கள்

3. அறந்தை நாராயணன்., (1998), பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், சாகித்திய அகாதெமி, பப்பிளிகேஷன், தமிழ்நாடு, சென்னை.

## References

1. *https://ta.wikipedia.org/*தீடிடுடி/பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரம்
2. *https://www.valaitamil.com/thanippadal7660.html*
3. *Funding: No funding was received for conducting this study.*
4. *Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.*